## வர்த்தகமும் சுற்றுலாவும்

1990 இல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்துறையின் அபிவிருத்திகள் முந்திய ஆண்டினதைவிட மிகவும் சாதகமானவையாக விளங்கின. சிஎஉ நியதிகளில் வணிக ஏற்றுமதிகளின் பெறுமதி 1989 இன் 11 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்தினால் கவர்ச்சிகரமாக வளர்ச்சியடைந்தது. மறுபுறம் இறக்குமதிகள் மீதான செலவு 1989 இன் 5 சதவீத வளர்ச்சிக்கு மாறாக 14 சதவீதத்தால் அதிகரித்தது. இதனால் வர்த்தகப் பற்றாக்குறை 1989 இன் அதே மட்டத்திலேயே பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்டது. எனினும் இது 1988 இனைவிட 8 சதவீதம் குறைவானதாகும். மறுபுறம் ஏற்றுமதி வருவாய் களுக்கான இறக்குமதிச் செலவு விகிதாசாரம் 1989 இன் 70 சதவீதத்திலிருந்து 1990 இல் 74 சதவீதத்திற்குக் குறிப்பிடத்தக்களவுக்கு அதிகரித்தது.

1990 இல் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட உயர்வான வளர்ச்சி முக்கிய மாகத் தேயிலை, சிறு வேளாண்மை உற்பத்திகள், புடவைகளும் ஆடைகளும், பெற்றோலிய உற்பத்திகள், ஏனைய கைத்தொழில் உற்பத்திகள், இரத்தினக் கற்கள் என்பவற்றிலிருந்து கிடைத்த அதிகரித்த வருவாய்கள் காரணமாக ஏற் பட்டதாகும். இவ்விடயங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் இறப்பர், தெங்கு போன்ற ஏனைய உற்பத்திகளிலிருந்து கிடைத்த வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச் சியை மேலதிகமாக ஈடுசெய்தன.

தற்காலிகச் சுங்கத் தரவுகளின்படி 1990 இல் இறக்குமதிச் செலவு ரூ. 1,055,590 இலட்சமாகவும் (சிஎஉ 19,400 இலட்சம்) ஏற்றுமதி வரவுகள் ரூ. 766,240 இலட்சமாகவும் (சிஎஉ 14,080 இலட்சம்) அமைந்து ரூ. 289,350 இலட்சங் கொண்ட (சிஎஉ 5,320 இலட்சம்) வர்த்தகக் குறையை ஏற்படுத்தின, எனினும் காலங் கடந்தமை, மற்றும் பதிவுசெய்தலுடன் தொடர்புடைய ஏனைய காரணிகள் என்பவற்றுக்காகச் சுங்கத் தரவுகளைச் சீராக்கம் செய்கையில் மொத்த இறக்குமதிகள் ரூ. 1,077,290 இலட்சமாகவும் (சிஎஉ 19,800 இலட்சம்)

அட்டவணை 1.36

வெளிநாட்டு வர்த்தகச் செயலாற்றம் 1988 — 1990

| ஆண்டு | வளர்ச்சி வீதங்கள் | | வர்த்தகக் குறிகாட்டிகள் (1981=100) | | விகிதம் | |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுமதி கள் | இறக்குமதி கள் | ஏற்றுமதி விலைகள் | இறக்குமதி விலைகள் | வர்த்தக மாற்று வீதம் | ஏற்றுமதி கள்/இறக்கு மதிகள் |
| 1988 ... | 1.7 | 4.5 | 165.8 | 157.0 | 105.6 | 0.66 |
| 1989 ... | 10.7 | 4.6 | 183.7 | 185.8 | 98.9 | 0.70 |
| 1990 (அ) ... | 20.1 | 14.0 | 234.6 | 262.7 | 89.3 | 0.74 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

ஏற்றுமதிகள் ரூ. 794,810 இலட்சமாகவும் (சிஎஉ 14,610 இலட்சம்) விளங்கின. இதன் விளைவாக சீராக்கப்பட்ட தரவுகள், 1989 இன் ரூ. 240,500 இலட்சம் (சிஎஉ 5,210 இலட்சம்) கொண்ட குறையுடன் ஒப்பிடுகையில் ரூ. 282,480 இலட்சங் கொண்ட குறையை (சிஎஉ 5,190 இலட்சம்) ஏற்படுத்தின.

இறப்பர், தெங்கு என்பன நீங்கலான ஏற்றுமதிகளின் சராசரி விலைகள் முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் சாதகமாக விளங்கின. மறுபுறம் கோதுமையும் அரிசியும் நீங்கலாக பெற்றோலியம், வளமாக்கி, சீனி போன்ற முக்கிய இறக்குமதிகளின் சராசரி விலைகள் 1989 இனைவிடக் கணிசமாக உயர்வடைந்தன. இதன் விளைவாக வர்த்தக மாற்று விகிதம் 1990 இல் 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.37

**ஏற்றுமதிகள், இறக்குமதிகள், வர்த்தக நிலுவை 1979—1990**

பத்து இலட்சம் ரூபாய்களில் (சிஎஉ பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | சுங்கத் தரவு | | | சீராக்கப்பட்ட தரவு | | |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுமதிகள் க.எ.பெ. (அ) | இறக்குமதிகள் கொ.கா.க. (ஆ) | வர்த்தக நிலுவை | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | வர்த்தக நிலுவை |
| 1979 ... | 15,286 | 22,560 | — 7,275 | 15,282 | 22,603 | — 7,321 |
| | (760) | (1,121) | (—361) | (759) | (1,123) | (—364) |
| 1980 ... | 17,388 | 33,637 | — 16,249 | 17,595 | 33,942 | — 16,347 |
| | (808) | (1,563) | (—755) | (818) | (1,577) | (—760) |
| 1981 ... | 20,199 | 35,530 | — 15,331 | 21,043 | 36,583 | — 15,540 |
| | (891) | (1,567) | (—676) | (928) | (1,614) | (—686) |
| 1982 ... | 21,124 | 36,876 | — 15,751 | 21,454 | 41,946 | — 20,492 |
| | (919) | (1,605) | (—686) | (934) | (1,826) | (—892) |
| 1983 ... | 25,183 | 42,021 | — 16,838 | 25,096 | 45,558 | — 20,461 |
| | (1,001) | (1,670) | (—669) | (998) | (1,811) | (—813) |
| 1984 ... | 37,006 | 46,913 | — 9,908 | 37,347 | 47,541 | — 10,194 |
| | (1,419) | (1,799) | (—380) | (1,432) | (1,823) | (—391) |
| 1985 ... | 35,035 | 49,069 | — 14,034 | 36,207 | 54,049 | — 17,843 |
| | (1,268) | (1,776) | (—508) | (1,311) | (1,956) | (—646) |
| 1986 ... | 34,092 | 51,282 | — 17,189 | 34,072 | 54,559 | — 20,487 |
| | (1,036) | (1,559) | (—523) | (1,036) | (1,658) | (— 623) |
| 1987 ... | 39,861 | 59,750 | — 19,889 | 41,133 | 60,528 | — 19,396 |
| | (1,046) | (1,568) | (—522) | (1,080) | (1,589) | (—509) |
| 1988 ... | 47,092 | 70,320 | — 23,228 | 46,928 | 71,030 | — 24,102 |
| | (1,101) | (1.645) | (—543) | (1,098) | (1,611) | (—564 |
| 1989 ... | 55.511 | 76,353 | — 19,842 | 56,175 | 80,225 | — 24,050) |
| | (1.202) | (1,631) | (—430) | (1,216) | (1,731) | (—521) |
| 1990 ... | 76,624 | 105.559 | — 28,936 | 79,481 | 107,729 | — 28,248 |
| | (1,408) | (1,940) | (—532) | (1,461) | (1,980) | (—519) |

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) மீள் ஏற்றுமதியின் பெறுமதியும் உட்பட.

(ஆ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக.

மாற்றல் வீதங்கள் 1989—1 சிஎஉ = ரூ. 46.1874
1990—1 சிஎஉ = ரூ. 54.4216

**ஏற்றுமதிகள்**

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின்படி ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வரவுகள் *1989* இன் சிஎஉ *12,160* இலட்சத்துடன் (ரூ. *561,750* இலட்சம்) ஒப்பிடுகையில் *1990* இல் சிஎஉ *14,610* இலட்சமாக (ரூ. *794,810* இலட்சம்) விளங்கி சிஎஉ நியதிகளில் *20* சதவீத அதிகரிப்பைக் காட்டின. வேளாண்மை, கைத்தொழில், கனிப்பொருள் போன்ற எல்லாவகையான ஏற்றுமதிகளிலும் இம்முன்னேற்றம் பிரதிபலிக்கப்பட்டது. வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வரவுகள் முந்திய ஆண்டின் *1* சதவீதங் கொண்ட சிறிதளவு அதிகரிப்புக்கெதிராக *11* சதவீதத்தினால் அதிகரித்தன. கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வரவுகளும் *1989* இன் *5* சதவீத அதிகரிப்பிற்கு மேலாக *10* சதவீதத்தினால் அதிகரித்

அட்டவணை *1.38*

**ஏற்றுமதிகளின் அமைப்பு 1988—1990**

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | பெறுமதி சி.எ.உ. பத்து இலட்சம் | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1990 (சு) | 1988 | 1989 | 1990 | 1988 | 1989 | 1990 |
| 1. வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதி ... | 20,104 | 22,049 | 28,852 | 470 | 477 | 530 | 42.8 | 39.2 | 36.3 |
| 1.1. தேயிலை ... | 12,299 | 13,664 | 19,823 | 288 | 296 | 304 | 26.2 | 24.3 | 24.9 |
| 1.2. இறப்பர் ... | 3,706 | 3,112 | 3,080 | 87 | 67 | 57 | 7.9 | 5.5 | 3.9 |
| 1.3. தெங்கு ... | 1,538 | 2,865 | 2,783 | 36 | 62 | 51 | 3.3 | 5.1 | 3.5 |
| 1.3.1 உள்ளீட்டு உற்பத்திகள் | 895 | 1,920 | 1,842 | 21 | 42 | 34 | 1.9 | 3.4 | 2.3 |
| 1.3.2 ஏனையவை ... | 643 | 945 | 941 | 15 | 20 | 17 | 1.4 | 1.7 | 1.2 |
| 1.4 சிறுவேளாண்மைப் பயிர்கள் (அ) | 2,561 | 2,408 | 3,165 | 60 | 52 | 58 | 5.4 | 4.3 | 4.0 |
| 2. கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதி (அ) (ஆ) ... | 22,674 | 28,470 | 41,510 | 530 | 616 | 763 | 48.3 | 50.7 | 52.2 |
| 2.1 புடவைகளும் ஆடைகளும்... | 14,260 | 17,631 | 25,163 | 333 | 382 | 462 | 30.4 | 31.4 | 31.6 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் | 2,265 | 2,242 | 3,974 | 53 | 49 | 73 | 4.8 | 4.0 | 5.0 |
| 2.3 ஏனையவை ... | 6,148 | 8,597 | 12,374 | 144 | 186 | 227 | 13.1 | 15.3 | 15.5 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதி ... | 2,614 | 2,093 | 3,484 | 61 | 58 | 64 | 5.6 | 4.8 | 4.4 |
| 3.1 இரத்தினக் கற்கள் ... | 2,070 | 2,204 | 2,933 | 48 | 48 | 54 | 4.4 | 3.9 | 3.7 |
| 3.2 ஏனையவை ... | 543 | 489 | 551 | 13 | 11 | 10 | 1.2 | 0.9 | 0.7 |
| 4. வகைப்படுத்தப்படாதவை (இ) ... | 1,536 | 2,963(உ) | 5,635 | 36 | 64 | 104 | 3.3 | 5.3 | 7.1 |
| மொத்த ஏற்றுமதிகள் (ஆ) ... | 46,928 | 56,175 | 79,481 | 1,097 | 1,216 | 1461 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள்
(ஆ) சீராக்கப்பட்டது
(இ) மீள் ஏற்றுமதிகள் உட்பட
(சு) தற்காலிகமானவை
(உ) கப்பலொன்றின் ஏற்றுமதியையும் உள்ளடக்குகிறது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
வரையறுக்கப்பட்ட ஏயர் லங்கா,
இலங்கை மத்திய வங்கி.

மாற்று வீதம்: 1988—1சிஎஉ=ரூ. 42.7577
1989—1சிஎஉ=ரூ. 46.1874
1990—1சிஎஉ=ரூ. 54.4216

தன. இதேவேளை 1989 இல் 16 சதவீதத்தினால் அதிகரித்த கைத்தொழில் ஏற்றுமதிகள் 1990 இல் 24 சதவீதங் கொண்ட வரவேற்கத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன.

இவ் அபிவிருத்திகளுடன் 1977 இன் பொருளாதாரச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்கள் 1990 இல் மேலும் மாற்றங்களைக் காட்டின. ஏற்றுமதிகளில், கைத்தொழில் ஏற்றுமதிகள் தொடர்ந்து முக்கிய வகுப்பாக விளங்கி 1989 இற்கும், 1990 இற்கும் இடையே அவற்றின் பங்கினை 51 சதவீதத்திலிருந்து 52 சதவீதத்திற்கு மேலும் உயர்த்தின. மாறாக 1977 இல் மொத்த ஏற்றுமதிகளில் கைத்தொழிலுடன் இணைந்து நான்கில் மூன்று பங்கிற்கு வகைகூறிய பெருந்தோட்ட வேளாண்மைப பயிர்கள் இரு ஆண்டுகளுக்குமிடையே 35 சதவீதத்திலிருந்து 32 சதவீதத்திற்கு வீழ்ச்சி யடைந்தன. இதே வேளை கனிப்பொருள் ஏற்றுமதிகளின் பங்கும் 5 சதவீதத்தி லிருந்து 4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1986 இல் மிகப் பெரும் ஏற்றுமதி விடயமாக அமைந்த புடவைகளும் ஆடைகளும் அதன் முதன்மை நிலையைப் பேணி அதன் பங்கினை 1989 இன் 31 சதவீதத்திலிருந்து 1990 இல் 32 சத வீதத்திற்கு உயர்த்தித் தனியொரு விடயமாக விளங்கியது.

**தேயிலை**

வேளாண்மை ஏற்றுமதிகளில் தேயிலை தொடர்ந்தும் முக்கிய உற்பத்தியாக விளங்கி 1990 இன் மொத்த ஏற்றுமதிகளில் 25 சதவீதத்திற்கு வகை கூறியது. தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 1989 இன் சிஎஉ 2,960 இலட்சத்திலிருந்து (ரூ. 136,640 இலட்சம்) ஏற்றுமதி அளவு, விலை ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக 1990 இல் சிஎஉ 3,640 இலட்சத்திற்கு (ரூ. 198,230 இலட்சம்) 23 சதவீதத்தினால் அதிகரித்தது. தேயிலை ஏற்றுமதிகளின் அளவு, அதிகரித்த உற்பத்தி காரணமாக 1989 இன் 2,040 இலட்சம் கிலோக்கிறாம் களிலிருந்து 1990 இல் 2,160 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 6 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் சராசரி ஏற்றுமதி விலை இரு ஆண்டுகளுக்குமிடையே கிலோக்கிறாம் ஒன்றுக்கு சிஎஉ 1.45 இலிருந்து (கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 66.91) கிலோக்கிறாமொன்றுக்கு சிஎஉ 1.69 ஆக (கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 91.78) 17 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இவ்வாறே கொழும்பு ஏலங்களில் தேயிலையின் சராசரி விலை கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 54.61 இலிருந்து கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 70.91 ஆக 30 சதவீதத்தால் உயர் வடைந்தது. எனினும் இதற்கு மாறாக இலண்டன் ஏலங்களில் இலங்கைத் தேயிலைக்குக் கிடைத்த சராசரி விலை இவ்விரு ஆண்டுகளுக்குமிடையே கிலோக் கிறாம் ஒன்றுக்கு 125.64 பென்சிலிருந்து கிலோக்கிறாம் ஒன்றுக்கு 112.29 பென்சாக 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.39

## இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு 1988—1990

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | பெறுமதி சி.எ.உ. பத்து இலட்சம் | | | மொத்த இறக்குமதியின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1988 | 1989(அ) | 1990(ஆ) | 1988 | 1989 | 1990(ஆ) | 1988 | 1989 | 1990(ஆ) |
| 1. நுகர்வுப் பொருட்கள் ... | 17,438 | 20,962 | 28,004 | 407.8 | 453.8 | 514.6 | 24.5 | 26.1 | 26.0 |
| 1.1 உணவும் குடிபானமும் ... | 10,214 | 13,136 | 16,566 | 238.9 | 284.4 | 304.4 | 14.4 | 16.4 | 15.4 |
| 1.1.1 அரிசி ... | 1,808 | 3,397 | 1,758 | 42.3 | 73.5 | 32.3 | 2.6 | 4.2 | 1.6 |
| 1.1.2 மா ... | 303 | 175 | 1,388 | 7.1 | 3.8 | 25.5 | 0.4 | 0.2 | 1.3 |
| 1.1.3 சீனி ... | 2,927 | 4,326 | 5,173 | 68.5 | 93.7 | 95.1 | 4.1 | 5.4 | 4.8 |
| 1.2 ஏனையவை ... | 7,225 | 7,826 | 11,438 | 169.0 | 169.4 | 210.2 | 10.2 | 9.8 | 10.6 |
| 2. இடைநிலைப் பொருட்கள் ... | 40,325 | 45,255 | 58,672 | 943.1 | 979.8 | 1,078.1 | 56.8 | 56.4 | 54.5 |
| 2.1 பெற்றோலியம் ... | 7,839 | 8,376 | 14,367 | 183.3 | 181.3 | 264.0 | 11.0 | 10.4 | 13.3 |
| 2.2 வளமாக்கி ... | 2,476 | 1,755 | 2,958 | 57.9 | 38.0 | 54.4 | 3.5 | 2.2 | 2.7 |
| 2.3 இரசாயனம் ... | 1,887 | 2,117 | 3,259 | 44.1 | 45.8 | 60.0 | 2.6 | 2.6 | 3.0 |
| 2.4 கோதுமை ... | 2,800 | 4,964 | 3,791 | 65.5 | 107.5 | 69.7 | 3.9 | 6.2 | 3.5 |
| 2.5 புடவைகளும் ஆடையும் (ஈ) ... | 8,796 | 9,981 | 10,977 | 205.7 | 216.1 | 201.7 | 12.4 | 12.4 | 10.2 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... | 12,081 | 12,018 | 19,129 | 282.5 | 260.2 | 351.5 | 17.0 | 15.0 | 17.8 |
| 3.1 பொறியும் கருவியும் ... | 7,047 | 6,278 | 8,659 | 164.8 | 135.9 | 159.1 | 9.9 | 7.8 | 8.0 |
| 3.2 போக்குவரத்துக் கருவி ... | 1,409 | 1,833 | 3,577 | 32.9 | 39.7 | 65.7 | 2.0 | 2.3 | 3.3 |
| 3.3 கட்டடப் பொருட்கள் ... | 1,038 | 991 | 1,043 | 24.3 | 21.5 | 19.2 | 1.5 | 1.2 | 1.0 |
| 4. பகுக்கப்படாதவை ... | 1,186 | 1,990 | 1,923 | 27.7 | 43.1 | 35.3 | 1.7 | 2.5 | 9.8 |
| மொத்த இறக்குமதிகள் (இ) ... | 71,030 | 80,225 | 107,729 | 1,661.2 | 1,736.9 | 1,979.5 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) திருத்தப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) சீராக்கப்பட்டது.
(ஈ) முன்னர் நுகர்வுப் பொருட்களாகப் பாகுபடுத்தப்பட்ட புடவை ஆடைகளின் இறக்குமதிகள் தற்பொழுது இடைநிலைப்பொருட்களாகப் பாகுபடுத்தப்படுகின்றன.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும் ஏனைய முதன்மை வளமாக்கி இறக்குமதியாளர்களும்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை மத்திய வங்கி.

## இறப்பர்

இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி 1989 இன் சிஎஉ 670 இலட்சத்தி லிருந்து (ரூ. 31,120 இலட்சம்) 1990 இல் சிஎஉ 570 இலட்சத்திற்கு (ரூ. 30,800 இலட்சம்) 15 சதவீதத்தால் மேலும் வீழ்ச்சியடைந்தது. இது முற்றாக ஏற்றுமதி விலை கிலோக்கிறாம் ஒன்றுக்கு சிஎஉ 0.78 இலிருந்து (கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 36.17) கிலோக்கிறாம் ஒன்றுக்கு சிஎஉ 0.65 இற்கு (கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 35.50) 17 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்தமை காரணமாக ஏற்பட்டதாகும். 1989 இல் 13 சதவீதத்தினால் 860 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்த இறப்பர் ஏற்றுமதிகளின் அளவு 1990 இல் 870 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 1 சதவீதத்தால் சிறிதளவு அதிகரித்தது. இறப்பரிலிருந்து கிடைத்த மொத்த வருவாய்களில் தட்டை இறப்பர் 51 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் லேட்டெக்ஸ் கிறேப் 35 சதவீதத்திற்கு வகை கூறியது. சோல் கிறேப்பும், கழிவுக் கிறேப்பும் தனித்தனி 6 சதவீதத்திற்கு வகை கூறின.

## தெங்கு

தெங்கு உற்பத்தி ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த மொத்த வருவாய்கள் 1989 இன் சிஎஉ 620 இலட்சத்திலிருந்து (ரூ. 28,650 இலட்சம்) 1990 இல் சிஎஉ 510 இலட்சத்திற்கு (ரூ. 840 இலட்சம்) 18 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்தன. இது ஏற்றுமதி அளவு 5,720 இலட்சம் காய்களிலிருந்து 5,080 இலட்சம் காய்களுக்கு 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை காரணமாக ஏற் பட்டதாகும். உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி 1989 இல் முக்கிய தெங்கு உற்பத்திப் பிரதேசங்களில் நிலவிய வரட்சி நிலைமைகளின் காலம் தாழ்ந்த விளைவு காரணமாக ஏற்பட்டதாகும். மறுபுறம் சராசரி ஏற்றுமதி விலை முந்திய ஆண்டினைப் போன்று காய் ஒன்றிற்கு சிஎஉ 0.07 ஆக மாற்றமின்றி விளங்கியது. எனவே ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பாதகமான தாக்கத்தினை ஈடுசெய்வதற்கு விலையின் போக்குகள் சாதகமாக அமையவில்லை. முக்கியமாகத் தேங்காய்ச் சிரட்டைக்கரி, கயிற்றுத்தும்புச் சிலிர்ப்புக்கள் என்ப வற்றிலிருந்தான குறைந்த வருவாய்கள் காரணமாகத் தெங்குத் துணை உற்பத்தி ஏற்றுமதிகளின் பெறுமதியும் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.

## சிறு வேளாண்மை உற்பத்திகள்

1990 இல் சிறு வேளாண்மை உற்பத்தித்துறையில் சிறந்த செயலாற்றம் காணப்பட்டது. இவ் ஏற்றுமதிகளின் பெறுமதி 1989 இன் சிஎஉ 520 இலட் சத்திலிருந்து (ரூ. 24,080 இலட்சம்) 1990 இல் சிஎஉ 580 இலட்சத்திற்கு (ரூ. 31,650 இலட்சம்) 12 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் மொத்த ஏற்றுமதிகளில் சிறு வேளாண்மை உற்பத்திகளின் பங்கு முந்திய ஆண்டினைப் போன்று பெரும்பாலும் 4 சதவீதங் கொண்ட மட்டத்திலேயே விளங்கியது. இவற்றில் காய்கறிகள், கராம்பு, புகையிலை, எள்ளு, மர முந்திரிப் பருப்பு என்பனவற்றின் வருவாய்களில் கணிசமான அதிகரிப்புக்கள் பதிவு செய்யப் பட்டன. எல்லாச் சிறு வேளாண்மை உற்பத்திகளிலும் கறுவா மட்டும் இத் துறையிலிருந்து கிடைத்த வருவாய்களில் 38 சதவீதத்திற்கு வகை கூறியது.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்**

கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1989 இன் சிஎஉ 6,160 இலட்சத்துடன் (ரூ. 284,700 இலட்சம்) ஒப்பிடுகையில் 1990 இல் சிஎஉ 7,630 இலட்சமாக (ரூ. 415,100 இலட்சம்) விளங்கி 24 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது முந்திய ஆண்டில் ஏற்பட்ட 16 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடத்தக்கது. புடவைகளும் ஆடைகளும், பெற்றோலிய உற்பத்திகள், ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் போன்ற எல்லா வகையான கைத்தொழில் உற்பத்திகளிலும் அதிகரித்த வளர்ச்சி வீதம் பிரதிபலித்தது. இரு ஆண்டுகளுக்குமிடையே புடவைகளும், ஆடைகளும் ஏற்றுமதிகள் சிஎஉ 3,820 இலட்சத்திலிருந்து சிஎஉ 4,620 இலட்சத்திற்கு 21 சதவீதத்தால் உயர்வடைந்தன. முக்கியமாக வளைகுடாப் பிரச்சனைகளின் விளைவாகப் பெற்றோலிய விலைகள் அதிகரித்தமையால் பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி சிஎஉ 490 இலட்சத்திலிருந்து சிஎஉ 730 இலட்சத்திற்கு 49 சதவீதத்தால் உயர்வடைந்தது. ஏனைய கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதியும் 22 சதவீதத்தால் அதிகரித்து இரசாயன உற்பத்திகள், தோல் மற்றும் இறப்பர் உற்பத்திகள், கடல் உற்பத்திகள் என்பவற்றிலிருந்தான அதிகரித்த வருவாய்களைப் பிரதிபலித்தன.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்**

முந்திய ஆண்டில் பின்னடைவினைக் கொண்டிருந்த கனிப்பொருள் ஏற்றுமதிகள் சிஎஉ 580 இலட்சத்திலிருந்து (ரூ. 26,930 இலட்சம்) சிஎஉ 640 இலட்சத்திற்கு (ரூ. 34,840 இலட்சம்) 10 சதவீதத்தால் அதிகரித்தன. இது பெரும்பாலும் ஏற்றுமதித் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக இரத்தினக்கல் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வருவாய்கள் சிஎஉ 480 இலட்சத்திலிருந்து (ரூ. 22,040 இலட்சம்) சிஎஉ 540 இலட்சத்திற்கு (ரூ. 29,330 இலட்சம்) 13 சதவீதத்தினால் அதிகரித்தமை காரணமாகவே முற்றும் ஏற்பட்டதாகும். யப்பான், தாய்லாந்து, ஐக்கிய அமெரிக்க நாடுகள், கொங்கொங் என்பன இரத்தினக்கல் ஏற்றுமதிகளுக்கான முக்கிய சந்தைகளாக விளங்கின. உலோகத் தாதுக்கள், இரும்பு பைறைட்டுக்கள், இயற்கைக் காரீயம் என்பவற்றை உள்ளடக்கும் ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளின் பெறுமதி சிஎஉ 110 இலட்சத்திலிருந்து சிஎஉ 100 இலட்சத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

**இறக்குமதிகள்**

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின்படி இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு 1989 இன் சிஎஉ 17,370 இலட்சத்துடன் (ரூ. 802,250 இலட்சம்) ஒப்பிடுகையில் 1990 இல் சிஎஉ 19,800 இலட்சமாக (ரூ. 1,077,290 இலட்சம்) அமைந்து 14 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இவ் அதிகரிப்பு முக்கியமாகக் கோதுமை மா, உந்து ஊர்திகள், ஈருருளிகள் போன்ற நுகர்வுப் பொருட்களினதும் பெற்றோலியம், வளமாக்கி போன்ற இடைநிலைப் பொருட்களினதும் போக்குவரத்து உபகரணங்கள், பொறித் தொகுதிகள் போன்ற முதலீட்டுப் பொருட்களினதும் இறக்குமதிகளில் பிரதிபலித்தது.

இறக்குமதிகளின் உள்ளடக்கம் 1990 இல் மிகச் சிறு மாற்றங்களையே காட்டியது. நுகர்வுப் பொருட்களின் பங்கு 1989 இனைப் போன்று 26 சத வீதங் கொண்ட அதே மட்டத்திலேயே தொடர்ந்தும் விளங்கிய வேளையில் இடைநிலைப் பொருட்களின் பங்கு 56 சதவீதத்திலிருந்து 54 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. எனினும் முதலீட்டுப் பொருட்களின் பங்கு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையே 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு அதிகரித்தது.

அட்டவணை 1.40

**1990 இல் முக்கிய இறக்குமதிகளின் அளவு**

மெற்றிக் தொன்கள்

| மாதம் | | அரிசி | கோதுமை | சீனி | பெற்றோலியம் (மசகெண்ணெய்) | வளமாக்கி |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | ... | 23,173 | 31,500 | 17,243 | 128,192 | 14,431 |
| பெப்புருவரி | ... | 38,450 | — | 11,501 | 183,693 | 37,229 |
| மாச்சு | ... | 8,798 | 149,514 | 39,191 | — | 79,308 |
| ஏப்பிறல் | ... | 31 | 100,814 | 17,006 | 127,013 | 52,235 |
| மே | ... | 21,051 | 49,412 | 34,164 | 189,724 | 23,449 |
| யூன் | ... | 46 | — | 18,088 | 126,576 | 15,576 |
| யூலை | ... | 19,269 | 36,750 | 30,420 | 184,994 | 12,610 |
| ஓகத்து | ... | 10,029 | 104,475 | 27,022 | 108,851 | 50,550 |
| செத்தெம்பர் | ... | 16 | — | 36,235 | 184,202 | 31,200 |
| ஒற்றோபர் | ... | 22,553 | 35,200 | 18,780 | 177,317 | 67,134 |
| நவெம்பர் | ... | 25,049 | — | 30,448 | 185,647 | 50,900 |
| திசெம்பர் | ... | 3,497 | 68,946 | 25,226 | 182,657 | 70,047 |
| மொத்தம் (அ) | ... | 171,962 | 576,611 | 305,324 | 1,778,866 | 504,669 |

(அ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும் ஏனைய முதன்மை வளமாக்கி இறக்குமதியாளர்களும்.

**நுகர்வுப் பொருட்கள்**

நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவு 1989 இன் சிஎஉ 4,540 இலட்சத்திலிருந்து (ரூ. 209,620 இலட்சம்) 1990 இல் சிஎஉ 5,150 இலட்சத்திற்கு (ரூ. 280,040 இலட்சம்) 13 சதவீதத்தால் அதிகரித்தது. இது உணவும் குடிபானமும், ஏனைய நுகர்வுப் பொருட்கள் ஆகிய இருவகையான நுகர்வுப் பொருட்களினதும் இறக்குமதிகளின் செலவுகள் அதிகரித்தமையால் ஏற்பட்டதாகும். உணவும் குடிபானமும் வகையில் கோதுமை மா இறக்குமதிகள் மீதான செலவு சிஎஉ 40 இலட்சத்திலிருந்து (ரூ. 1,750 இலட்சம்) சிஎஉ 260 இலட்சத்திற்கு (ரூ. 13,880 இலட்சம்) பெரும்பாலும் ஏழு மடங்கு கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது இறக்குமதி அளவு 17,250 மெற்றிக் தொன்களிலிருந்து 128,736 மெற்றிக் தொன்களுக்கு எட்டு மடங்காக அதிகரித்தமையால் ஏற்பட்டதாகும். எனினும் அரிசி இறக்குமதிகளின் அளவு 315,959 மெற்றிக் தொன்களிலிருந்து 171,962 மெற்றிக் தொன்களுக்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்தமை காரணமாக இறக்குமதிகளின் பெறுமதி இவ்விரு ஆண்டுகளுக்குமிடையே சிஎஉ 740 இலட்சத்திலிருந்து (ரூ. 33,970 இலட்சம்) சிஎஉ 320 இலட்சத்திற்கு (ரூ. 17,580 இலட்சம்) 56 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியுற்றது. இதேவேளை சீனியின் விலை மெற்றிக் தொன் ஒன்றிற்கு சிஎஉ 292 இலிருந்து மெற்றிக் தொன் ஒன்றுக்கு சிஎஉ 311 ஆக 7 சதவீதத்தால் அதிகரித்தமை காரணமாக சீனி இறக்குமதிகளின் பெறுமதி சிஎஉ 940 இலட்சத்திலிருந்து (ரூ. 43,260 இலட்சம்) சிஎஉ 950 இலட்சத்திற்கு (ரூ. 51,730 இலட்சம்) சிறிதளவால் அதிகரித்தது. மாறாக இறக்குமதிகளின் அளவு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையே 320,403 மெற்றிக் தொன்களிலிருந்து 305,324 மெற்றிக் தொன்களுக்கு 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. முக்கியமாக உந்து ஊர்திகள், ஈருருளிகள் என்பவற்றின் இறக்குமதி மீதான செலவு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையே சிஎஉ 620 இலட்சத்திலிருந்து (ரூ. 28,860 இலட்சம்) சிஎஉ 800 இலட்சத்திற்கு (ரூ. 43,300 இலட்சம்) 29 சதவீதத்தால் அதிகரித்தமை காரணமாக ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளின் பெறுமதி சிஎஉ 1,690 இலட்சத்திலிருந்து (ரூ. 78,260 இலட்சம்) சிஎஉ 2,100 இலட்சத்திற்கு (ரூ. 114,380 இலட்சம்) 24 சதவீதத்தால் அதிகரித்தது.

**இடைநிலைப் பொருட்கள்**

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு 1989 இன் சிஎஉ 9,800 இலட்சத்துடன் (ரூ. 452,550 இலட்சம்) ஒப்பிடுகையில் 1990 இல் சிஎஉ 10,780 இலட்சமாக (ரூ. 586,720 இலட்சம்) அமைந்து 10 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது பெரும்பாலும் பெற்றோலியம், வளமாக்கி, இரசாயனம், தாள் உற்பத்திகள் என்பன மீதான அதிகரித்த செலவு காரணமாக

ஏற்பட்டதாகும். முக்கியமாக வளைகுடாப் பிரச்சனையைத் தொடர்ந்து ஏற்பட்ட விலை அதிகரிப்புக் காரணமாகப் பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவு சிஎஉ 1,810 இலட்சத்திலிருந்து (ரூ. 83,760 இலட்சம்) சிஎஉ 2,640 இலட்சத்திற்கு (ரூ. 143,670 இலட்சம்) 46 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. வளமாக்கி இறக்குமதிகளின் அளவு 354,900 மெற்றிக் தொன்களிலிருந்து 504,669 மெற்றிக் தொன்களுக்கு 42 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்தமை காரணமாக அதன் இறக்குமதிகள் மீதான செலவும் சிஎஉ 380 இலட்சத்திலிருந்து (ரூ. 17,550 இலட்சம்) சிஎஉ 540 இலட்சத்திற்கு (ரூ. 29,580 இலட்சம்) 43 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இரசாயன உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவு சிஎஉ 460 இலட்சத்திலிருந்து (ரூ. 21,170 இலட்சம்) சிஎஉ 600 இலட்சத்திற்கு (ரூ. 32,590 இலட்சம்) 31 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் தாளும் தாள் அட்டைகளும் மீதான செலவு சிஎஉ 390 இலட்சத்திலிருந்து (ரூ. 18,130 இலட்சம்) சிஎஉ 540 இலட்சத்திற்கு (ரூ. 29,470 இலட்சம்) கணிசமாக அதிகரித்து 38 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.

கோதுமைத் தானியம், புடவைகள் என்பனவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைவான செலவுகளை ஈடுசெய்வதற்கு இவ் அதிகரிப்புக்கள் தேவைக்கும் மேலாக விளங்கின. விலைகளிலும் அளவிலும் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக கோதுமைத் தானியத்தின் இறக்குமதிகள் மீதான செலவு 1989 இன் சிஎஉ 1,080 இலட்சத்திலிருந்து (ரூ. 49,640 இலட்சம்) 1990 இல் சிஎஉ 700 இலட்சத்திற்கு (ரூ. 37,910 இலட்சம்) 35 சதவீதத்தால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. இறக்குமதி அளவு 726,036 மெற்றிக் தொன்களிலிருந்து 576,611 மெற்றிக் தொன்களுக்கு 21 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தவேளையில் இறக்குமதி விலை மெற்றிக் தொன் ஒன்றுக்கு சிஎஉ 148 இலிருந்து மெற்றிக் தொன் ஒன்றுக்கு சிஎஉ 121 இற்கு 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கோதுமை மா இறக்குமதிகளின் அளவு அதிகரித்தமை பெரும்பாலும் கோதுமைத் தானிய இறக்குமதிகளின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. புடவைகளும் ஆடைகளினதும் இறக்குமதிப் பெறுமதி சிஎஉ 2,160 இலட்சத்திலிருந்து (ரூ. 99,810 இலட்சம்) சிஎஉ 2,020 இலட்சத்திற்கு (ரூ. 109,770 இலட்சம்) 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்குக் குறைவான விலைகளே முக்கிய காரணமாகும்.

**முதலீட்டுப் பொருட்கள்**

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவு 1989 இன் சிஎஉ 2,600 இலட்சத்திலிருந்து (ரூ. 120,180 இலட்சம்) 1990 இல் சிஎஉ 3,520 இலட்சத்திற்கு (ரூ. 191,290 இலட்சம்) 35 சதவீதத்தினால் அதிகரித்தது.

இது பெரும்பாலும் போக்குவரத்துக் கருவிகளினதும் பொறித் தொகுதிகளினதும் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக ஏற்பட்டதாகும். போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதிப் பெறுமதி சி.எ.உ 400 இலட்சத்திலிருந்து (ரூ. 18,330 இலட்சம்) சி.எ.உ 660 இலட்சத்திற்கு (ரூ. 35,770 இலட்சம்) 65 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் பொறித்தொகுதிகளின் பெறுமதி சி.எ.உ 1,360 இலட்சத்திலிருந்து (ரூ. 62,780 இலட்சம்) சி.எ.உ 1,590 இலட்சத்திற்கு (ரூ. 86,590 இலட்சம்) 17 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் கட்டடப் பொருட்களின் இறக்குமதிகளின் பெறுமதி சி.எ.உ 220 இலட்சத்திலிருந்து (ரூ. 9,910 இலட்சம்) சி.எ.உ 190 இலட்சத்திற்கு (ரூ. 10,430 இலட்சம்) 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட மந்த நிலையைப் பிரதிபலித்தது.

## உள்நாட்டு வர்த்தகம்

1977 இன் தாராள வர்த்தகத்தைத் தொடர்ந்து வர்த்தகத்தை வழிநடத்துவதில் சந்தை விலைகளுக்குக் கூடிய முக்கியத்துவம் வழங்குவதனை உள்நாட்டு வர்த்தகக் கொள்கை குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இதன் விளைவாக நியாயமான போட்டியினை ஊக்குவிக்கும் பொருட்டு அரசின் தலையீட்டை ஆகக் குறைந்த அளவில் பேணுவதன் மூலம் பொருட்களினதும் பணிகளினதும் மொத்த, சில்லறை வர்த்தகத்தில் தனியார்துறையின் பங்களிப்புக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

1987 ஒகத்தில் நிறுவப்பட்ட நியாய வர்த்தக ஆணைக்குழு தேசிய விலையிடல் கொள்கையினை வடிவமைக்கவும் செயற்படுத்தவும் பொறுப்பாகவுள்ளதுடன் தனியுரிமைகள், இணைப்புக்கள், போட்டிக்கெதிரான வழிமுறைகள் ஆகியவற்றின் கட்டுப்பாடுகள் தொடர்பான அதன் கடமைகளையும் மேற்கொண்டது. ஆய்விற்குரிய ஆண்டில் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விலை மீளாய்வுகள் முந்திய ஆண்டின் 161 இற்கெதிராக 89 ஆக விளங்கின. விலை மீளாய்வுகள் நுகர்வோர், உற்பத்தியாளர் ஆகிய இருவகையினதும் நலன்களைப் பாதுகாப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தன.

முன்னைய ஆண்டுகளைப் போலவே 'மகாபொல' வர்த்தக சந்தைகளையும் நுகர்வோர் அமைப்புக்களையும் ஒழுங்குபடுத்துவதன் மூலம் நுகர்வோரின் அறிவாற்றலை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. இதற்கேற்ப 1990 இல் 1,042 புதிய நுகர்வோர் அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டவேளையில் வேறு 734 அமைப்புக்கள் மீளமைக்கப்பட்டன. இவ்வாண்டில் களுத்துறையிலும், நீர்கொழும்பிலும் இரு 'மகாபொல' சந்தைகள் நடாத்தப்பட்டன.

அரச வர்த்தக அமைப்புக்கள் வர்த்தகச் சூழலின் தாராளமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கையின் பணிச்சட்டத்தினுள் தமது குறிக்கோள்களைப் பன்முகப் படுத்துவதற்கு முயற்சித்துடன் தனியார்துறையுடன் தாக்கமான முறையில் போட்டியிடுவதற்கு மிகவும் ஆற்றல் வாய்ந்த அணுகுமுறையையும் தொடர்ந்து மேற்கொண்டன. சந்தையில் போதியளவு நிரம்பலை உறுதிப்படுத்தும் பொருட்டு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் அத்தியாவசியப் பண்டங்களின் தாங்கிருப்பைப் பேணும் முக்கிய பொறுப்பினை வகித்தது. முன்னர் உணவுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கோதுமைத் தானியம், கோதுமை மா, அரிசி என்பவற்றின் இறக்குமதியும் 1989 ஓகத்திலிருந்து கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

### வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

1977 இல் ஆரம்பிக்கப்பட்ட தாராளமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கை யானது தீர்வைகள், ஏற்றுமதி/இறக்குமதிகள் என்பவற்றின் ஒழுங்கு விதிகளில் செய்யப்பட்ட சிறு திருத்தங்களுடன் 1990 இலும் தொடர்ந்து தொழிற் பாட்டிலிருந்தது.

### தீர்வைகள்

1990 இல் ஏற்றுமதிகள் மீதான தீர்வைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை. 1988 நவெம்பரில் மீளாய்வு செய்யப்பட்ட தேயிலை மீதான ஏற்றுமதித் தீர்வை ஆய்விற்குரிய ஆண்டிலும் மாற்றமின்றியிருந்தது. எனவே தொகை வடிவிலான தேயிலை, உறைகளில் அடைக்கப்பட்ட தேயிலை, தேயிலைப் பைகள், உடன் தேயிலை, ஏனைய எல்லாத் தேயிலைகள் என்பன வற்றுக்குப் பொறுப்பான தீர்வை வீதங்கள் முறையே கி.கி. ஒன்றுக்கு ரூ. 1.50, கி.கி. ஒன்றுக்கு ரூ. 1.00, கி.கி. ஒன்றுக்கு ரூ. 0.50, கி.கி. ஒன்றுக்கு ரூ. 6.50, கி.கி. ஒன்றுக்கு ரூ. 3.50 ஆக விளங்கின. எனினும் பெறுமான விகித விற்பனை வரியைக் கணிப்பதற்கான அடிப்படை விலை 1990 யூலையில் மீளாய்வு செய்யப் பட்டு வரி விதிக்கப்படும் விலை மட்டம் கி.கி. ஒன்றுக்கு ரூ. 60 இலிருந்து, கி.கி. ஒன்றுக்கு ரூ. 65 ஆக உயர்த்தப்பட்டவேளையில் வரி விதிக்கத்தக்க மட்டத்திற்கு மேற்பட்ட விலைகளில் வரி வீதம் 50 சதவீதமாக கி.கி. ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 15 என்ற அடிப்படையில் பேணப்பட்டது. இத்துடன் தேயிலை ஏற்றுமதி வரி 1990 ஏப்பிறலில் கி.கி. ஒன்றுக்கு ரூ. 2.00 இலிருந்து கி.கி. ஒன்றுக்கு ரூ. 3.50 ஆக உயர்த்தப்பட்டது.

### இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடு

செயற்கைப் பிசின், பிளாத்திக்குப் பொருட்கள், மரக் கூறு (கள்) எஸ்ரர்கள், எத்தர்கள், மண்வெட்டிகள் என்பனவற்றின் இறக்குமதி தாராளமாக்கப்பட்ட வேளையில் உந்து ஈருருளிகள், தன்னியக்க ஈருருளிகள் மூன்று வருடத்திற்கு மேற்பட்ட முச்சில்லு வான்களும், தன்னியக்க முச்சில்லு வண்டிகளும் என்பன இறக்குமதி உரிமத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. 30 அல்லது அதற்கு மேற் பட்ட இருக்கை வசதியைக் கொண்ட உந்துப் பேருந்துக்களின் இறக்குமதி அவற்றின் வயதெல்லை 5 வருடத்திலிருந்து 10 வருடத்திற்குக் தளர்த்தப்பட்டு அனுமதிக்கப்பட்டது. ஏற்றுமதி ஒழுங்கு விதிகளைப் பொறுத்தவரை 1990 இல் மாற்றமெதுவும் இருக்கவில்லை.

**வர்த்தக ஒழுங்குகள்**

ஏற்றுமதி, இறக்குமதி நாடுகள் இரண்டிலுமிருந்து தேவைப்படும் 80 சதவீத உறுதிப்படுத்தலுடன் 1989 ஏப்பிறலில் முறைப்படி நடைமுறைக்கு வந்த பன்னாட்டு இயற்கை இறப்பர் ஒப்பந்தத்திற்கு (பஇஇஒஉ) இலங்கை 1990 ஓகத்தில் கைச்சாத்திட்டது. எடுத்துரைக்கப்பட்ட பன்னாட்டுத் தேயிலை ஒப்பந்தம் தொடர்பாக 1990 இலும் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. முக்கிய கோப்பி உற்பத்தி நாடுகளும் இறக்குமதி செய்யும் நாடுகளும் புதிய ஒப்பந்தத்தின் நிபந்தனைகள்மீது ஒரு உடன்பாட்டிற்கு வர முடியாதிருந்தமையால் 1989 செத்தெம்பரில் காலாவதியாகும் பன்னாட்டுக் கோப்பி ஒப்பந்தம் 1989 ஒத்தோபரிலிருந்து மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. 1989 யூலையில் இடைநிறுத்தி வைக்கப்பட்ட கோப்பி அனுமதிப் பங்குகள் 1990 ஆம் ஆண்டு முழுவதும் அவ்வாறே தொடர்ந்துமிருந்தன.

1989 இல் நடைமுறைக்கு வந்த வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறை மீதான ஒப்பந்தம் அரசினால் 1990 நவெம்பரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசிறைப் பாதுகாப்புக் கட்டளைகளின் மூலம் சட்டவலுவுடையதாக்கப்பட்டது. வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறையின் முக்கிய நோக்கம் வர்த்தக முன்னுரிமைகளைப் பரிமாறுவதன்மூலம் அபிவிருத்தியடையும் நாடுகளுக்கிடையே வர்த்தகத்தை ஊக்குவிப்பதாகும். 1976 இல் முதலாவதாக ஒப்பந்தமிடப்பட்ட பாங்கொங் ஒப்பந்தம் 1990 மேயில் மீண்டும் இடம்பெற்ற நான்காவது அமர்வுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இவ் அமர்வில் வங்காளதேசம், இந்தியா, தென்கொரியா போன்ற ஏனைய அங்கத்துவ நாடுகளிலிருந்து இலங்கை அதன் ஏற்றுமதிப் பயன்பாடுடைய 60 விடயங்களுக்குச் சலுகை அடிப்படையிலான தீர்வை வீதங்களைப் பெற்றது.

**சுற்றுலா**

1983 இல் உள்நாட்டுக் குழப்பம் தலையெடுத்ததைத் தொடர்ந்து கீழ் நோக்கிய போக்கினைக் கொண்டிருந்த சுற்றுலாக் கைத்தொழில் நாட்டின் பாதுகாப்பு நிலைமை முன்னேற்றமடைந்ததன் விளைவாக 1990 இல் குறிப்பிடத்தக்களவு மீட்சியினை அடைந்தது. 1990 இல் மொத்தச் சுற்றுலா வருகைகள் 297,888 ஆக அமைந்து 1989 இனைவிட 61 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. ஆய்விற்குரிய ஆண்டில் சுற்றுலா வருகையினர் கழித்த இரவுகளின் எண்ணிக்கை 3,068,246 ஆக விளங்கி 56 சதவீத ஆண்டு வளர்ச்சியைப் பிரதிபலித்தது.

எல்லா முக்கிய பிரதேசங்களிலுமிருந்தான சுற்றுலா வருகைகளும் 1990 இல் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. கடந்த காலத்தைப் போன்று மேற்கு ஐரோப்பா அதன் நிலையை முதன்மைச் சந்தையாகப் பேணியதுடன் முந்திய ஆண்டின் மொத்த வருகைகளில் 55 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 57 சதவீதமாக விளங்கியது. மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலா வருகைகள் 169,294 ஆக விளங்கி 1989 இனைவிட 66 சதவீதம் கொண்ட கவர்ச்சிகரமான அதிகரிப்பைப் பதிவு செய்தன. இரண்டாவது பெரும் சந்தையான ஆசியாவிலிருந்தான வருகைகள் 53 சதவீதத்தினால் அதிகரித்து இந்தோனேசியா. யப்பான், கொங்கொங் என்பவற்றிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகைகளைப் பிரதிபலித்தன. அவுத்திர

## அட்டவணை 1.41

## சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1989 – 1990

| விடயம் | 1989 | 1988 இனைவிட % மாற்றம் | 1990 | 1989 இனைவிட % மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் ... | 184,732 | + 1.1 | 297,888 | + 61.3 |
| 2. இன்பப் பயணிகளின் வருகைகள் ... | 4,064 | — 33.5 | 3,954 | — 2.7 |
| 3. பயணி இரவுகள் ('000) ... | 1,970 | — 14.5 | 3,068 | + 55.7 |
| 4. மொத்த சுற்றுலாப் பெறுகைகள் | | | | |
| 4.1 ரூபா பத்து இலட்சம் ... | 2,739.7 | + 12.4 | 4,800.0 (அ) | + 75.2 |
| 4.2 ஐ.அ. டொலர் பத்து இலட்சம் ... | 76.0 | — 0.8 | 120.0 | + 57.9 |
| 4.3 சி.எ.உ. பத்து இலட்சம் ... | 59.3 | 4.0 | 88.2 | + 48.7 |
| 5. நோக்கங்களின்படியான வரவுகளின் எண்ணிக்கை | | | | |
| 5.1 களியாட்டம் ... | 170,170 | + 3.1 | 277,722 | + 63.2 |
| 5.2 வியாபாரம் ... | 11,774 | — 13.9 | 15,250 | + 29.5 |
| 6. பிரதேச அடிப்படையிலான வருகைகளின் எண்ணிக்கை | | | | |
| 6.1 மேற்கு ஐரோப்பா ... | 101,910 | — 8.5 | 169,294 | + 66.1 |
| 6.2 ஆசியா ... | 65,428 | + 21.8 | 100,004 | + 52.8 |
| 6.3 வட அமெரிக்கா ... | 5,844 | — 10.6 | 8,084 | + 38.3 |
| 7. மொத்த தொழில் வாய்ப்பு ... | 48,000 | + 1.6 | 60,000 (அ) | + 25.0 |
| 7.1 நேரடியாக ... | 20,000 | + 1.6 | 25,000 | + 25.0 |
| 7.2 மறைமுகமாக ... | 28,000 | — 1.6 | 35,000 | + 25.0 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கைச் சுற்றுலாச் சபை.

லாசியாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலுமிருந்தான வருகைகள் 1989 இனைவிட முறையே 122 சதவீதத்தாலும், 66 சதவீதத்தாலும் அதிகரித்த வேளையில் வட அமெரிக்காவிலிருந்தான வருகைகளும் 38 சதவீதத்தால் அதிகரித்தன. சுற்றுலாச் சபை மூலங்களின்படி 1990 இல் சுற்றுலாத்துறையிலிருந்து கிடைத்த மொத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ரூ. 48,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டு (சிஎஉ 880 இலட்சம்) முந்திய ஆண்டின் வருவாய்களைவிட 75 சதவீத (சிஎஉ நியதிகளில் 49 சதவீதம்) அதிகரிப்பைக் காட்டின.

1990 இல் சுற்றுலாக் கைத்தொழிலினால் வழங்கப்பட்ட மொத்த வேலை வாய்ப்பு 60,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மொத்தத் தொகையில், 25,000 பேர் இக் கைத்தொழிலில் நேரடியாகத் தொழிலிலமர்த்தப்பட்டிருந்த வேளையில் மீதியான 35,000 பேர் அதனுடன் தொடர்புடைய துறைகளில் தொழிலிலமர்த்தப்பட்டிருந்தனர்.

தரமிடப்பட்ட தங்குமிடத்துறையில் சுற்றுலா விடுதிக்கூறுகளின் எண்ணிக்கை 1989 இன் 118 இலிருந்து 1990 இல் 120 இற்கு விரிவடைந்தது. இதன் விளைவாக மொத்த அறை வசதிகள் 1989 இன் 9,459 அறைகளிலிருந்து 1990 இல் 9,556 அறைகளுக்கு 1 சதவீதத்தால் சிறு அளவில் அதிகரித்தன. இதேவேளை, தரமிடப்பட்ட தங்குமிடத்துறையில் அறைகளில் தங்கும் ஆண்டு வீதம் 1989 இன் 31 சதவீதத்திலிருந்து 1990 இல் 47 சதவீதத்திற்கு அதிகரித்தது. துணைத் தங்குமிடத்துறையில் கூறுகளின் எண்ணிக்கை இவ்விரு ஆண்டுகளுக்குமிடையே 80 இலிருந்து 96 ஆக 20 சதவீதத்தால் அதிகரித்தது.

1983 இலிருந்து அரசினால் சுற்றுலாவிடுதிகள் துறைக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரண வழிமுறைகள் 1990 இலும் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்து வந்தன. இவ் வழிமுறைகள் கடன்கள் 100 சதவீதம் மீள அட்டவணையிடப் படுவதையும் கடன்களின் மீள் கொடுப்பனவின் சட்ட ரீதியான கால அவகாசம் நீடிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட சுற்றுலா விடுதிகளின் தொழிற்படு மூலதனத் தேவைகளை ஈடுசெய்வதற்காக வட்டியல்லாக் கடன் வசதிகளை வழங்குவதை யும் உள்ளடக்கியிருந்தன.

மேலும் 1990 திசெம்பர் 14 இலிருந்து இலங்கைச் சுற்றுலாச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட தற்போது தொழிற்பாட்டிலுள்ள சுற்றுலா விடுதிகளின் சொத்துக்களை மீளப் புதுப்பித்தல்/பதிலிடலுக்காக வழங்கப்படும் கடன்கள் வசதிகள் என்பன தொடர்பாக எல்லா வர்த்தக வங்கிகளும் ஒப்புதலளிக்கப்பட கொடுகடன் நிறுவனங்களும் மத்திய வங்கியிடமிருந்து மீள் நிதியிடல் வசதியைப் பெறுவதற்கு இயலுமாயிருந்தது.